நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு
அம்பிகா ஜுவலர்ஸ்
77. செட்டியார் தெரு. கொழும்பு-11.
தொலைபேசி- 422839. 43^238

செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல 6591 1990 மே 18 வெள்ளிக்கிழமை ★ ★ ★ தினபதி

தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்
Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO.11.
Phone: 422839 434238

அமைச்சரவைத் தீர்மானம்

# வெளிநாடுகளிலிருந்து வைத்திய நிபுணர்கள்

## அவசரமாக வரவழைக்க அரசாங்கம் ஏற்பாடு

### இலங்கை டாக்டர்கள் திரும்பி வந்தால் அந்நியருக்குரிய சம்பளம், சலுகைகள்

— இரா புத்திரசிகாமணி —

கொழும்பு, மே 17

வைத்திய நிபுணர்களுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டு விட்டது. அதனால் வெளிநாடுகளிலிருந்து வைத்திய நிபுணர்கள் அவசரமாக வரவழைக்கப்படவிருக்கிறார்கள். இது அமைச்சரவை முடிவு.

அமைச்சரவைப் பேச்சாளரான தோட்டத் தொழிற்றுறை அமைச்சரும பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இந்தத் தகவல்களை நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்.

அவசர தேவையை ஈடுசெய்வதற்கு வெளிநாட்டு டாக்டர்களை தந்து உதவுமாறு இங்குள்ள வெளிநாட்டு தூதுவர்களிடம அரசாங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மிக அவசரமாக 65 விசேட வைத்திய நிபுணர்கள் தேவைப்படுகின்றனர். கண், காது, நரம்பியல் மற்றும், இருதயம் - மூளை சத்திர சிகிச்சை நிபுணர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது.

இதேவேளை வெளிநாடுகளில் பணி புரியும இலங்கை டாக்டர்களுக்கும அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. இதனை ஏற்று வரும இலங்கை டாக்டர்களுக்கும வெளிநாட்டவர்களுக்கு வழங்கப்படும அதே சமபளமும சலுகைகள் அனைத்தும் வழங்கப்படும என்றும அமைச்சர் கூறினார்.


வெளிநாட்டு டாக்டர்களை அழைப்பதில் சிக்கல் எதுவும ஏற்

(4ஆம பக்கம பார்க்க)

## மரம் முறிந்து விழுந்தது; தந்தை 2 மகன்கள் பலி

கொழும்பு, மே 17

வீட்டின் மீது மரம ஒன்று முறிந்து விழுந்தது- அதனால்



காலஞ்சென்ற திருமதி கலா தமபிமுத்துவின் இறுதி ஊர்வலத்தில் எம பிக்களான திரு மாவை சேனாதிராஜா, ஜனாப் ஹலீம இஷாக், திரு அத்தாவுத செனவிரத்ன, ஜனாப் எம எல் எம ஏ ஹிஸ்புல்லாஹ், திரு எஸ் பிரேமச்சந்திரன், திரு வி யோகசங்கரி, திரு பிரின்ஸ் காசிநாதர் மற்றும வடக்கு கிழக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் ஜனாப் எம கே அபூயூசுப் ஆகியோர் செல்வதைப் படத்தில் காணலாம்-

[படம; லக்ஷ்மன் குணதிலக்க]

## கனத்தையில் கலாவின் ஈமக் கிரியைகள்

காலஞ்சென்ற திருமதி கலா தமபிமுத்துவின் பூதவுடல் நேற்று பிற்பகல் பொரளை கனத்தை மயானத்தில் தகனம செய்யப்பட்டது-

ஈ பி ஆர் எல் எப், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம காங்கிரஸ், ஐக்கிய சோசலிஷ முன்னணி ஆகியவற்றின் நாடாளுமன்ற உறுப்பினர்களும, அரசியல் பிரமுகர்களும நேற்று இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்-

(4ஆம பக்கம பார்க்க)

## மிளகாய், மா, பெ. வெங்காயம் அவசரமாக இறக்குமதி

கொழும்பு, மே 17

பொதுமக்களின் தேவைக்காக அவசரமாக மிளகாய் பெரிய வெங்காயம கோதுமை மா ஆகியவை இறக்குமதி செய்யப்படவுள்ளன- அமைச்சரவை இந்த முடிவை எடுத்ததாக அமைச்சர் ரஞ்சன் நேற்றுப் பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்-

இந்தியாவிலிருந்து 500 மெட்ரிக் தொன் மிளகாயும, பாகிஸ்தானில் இருந்து 750 மெட்ரிக் தொன் பெரிய வெங்காயமும இறக்குமதி செய்யப்படவுள்ளன.

அமெரிக்காவிலிருந்து கோதுமை தானியமும கோதுமை மாவும் இறக்குமதி செய்யப்படவிருக்கின்றன என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன கூறினார். அவர் மேலும தெரிவித்த அமைச்சரவை முடிவு

(2 ஆம பக்கம பார்க்க)

## கண்டி பகுதியில் மதிய உணவு நிறுத்தம்

கண்டி மாவட்டத்தில் உள்ள எல்லாப் பாடசாலைகளிலும நேற்று முதல் பாடசாலை மாணவர்களுக்கான மதிய உணவு நிறுத்தப்பட்டுள்ளது-

கண்டி மாவட்ட சிரேஷ்ட கல்வி அதிகாரி இதனைப் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளார்-

மதிய உணவுக்குப் பதிலாக உணவு முத்திரைகளை வழங்கும திட்டத்தை அமுல் படுத்துமபடி கூறப்பட்டுள்ளது- எனினும அதற்கான முத்திரைகள் வழங்கப்படவில்லை-

இதேவேளை மாவினால் தயாரிக்கப்பட்ட உணவுப் பண்டங்களைக் கொண்டு வருபவர்களுக்கு உணவு முத்திரை வழங்கப்படமாட்டாது- இந்த நாட்டு தானிய வகைகளைக் கொண்டு தயாரிக்கப்படும உணவு வகைகளைக் கொண்டுவரும மாணவர்களுக்கு மட்டுமே உணவு முத்திரை வழங்கப்படும என்றும அறிவிக்கப்பட்டுள்ளது- (ய-017)

## 2 மகன்கள் பலி

கொழும்பு, மே 17

வீட்டின் மீது மரம் ஒன்று முறிந்து விழுந்தது- அதனால் நித்திரையிலிருந்த தந்தையும் மகன்மார் இருவரும் பலியானார்கள்-

(4ஆம் பக்கம் பார்க்க)

...கின்றனர்- கண், காது, நரம்பியல் மற்றும் இருதயம் - மூளை சத்திர சிகிச்சை நிபுணர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர் என்று சுகாதார அமைச்சு அரசாங்கத்திடம் தெரிவித்துள்ளது

இதனைத் தொடர்ந்தே அரசாங்கம் வெளிநாடுகளில் இருந்து விசேட வைத்திய நிபுணர்களை சேவைக்கு அழைக்கத் தீர்மா...

...னார்-

வெளிநாட்டு டாக்டர்களை அழைப்பதில் சிக்கல் எதுவும் ஏற்...

(4ஆம் பக்கம் பார்க்க)

...காலஞ்சென்ற திருமதி கலா தமபிமுத்துவின் பூதவுடல் நேற்று பிற்பகல் பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்பட்டது-

...ஈ பி ஆர் எல் எப், தமிழர் விடுதலைக் கூட்டணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, முஸ்லிம் காங்கிரஸ், ஐக்கிய சோசலிஷ முன்னணி ஆகியவற்...

...னர்களும், அரசியல் பிரமுகர்களும் நேற்று இறுதிச் சடங்கில் கலந்து கொண்டனர்-

(4ஆம் பக்கம் பார்க்க)

...தொண்டுவரும் மாணவர்களுக்கு மட்டுமே உணவு முத்திரை வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது- (ய-017)

# தயாராக இருங்கள்

# படையினருக்கு இந்திய

# இராணுவ தளபதி சர்மா

புதுடில்லி மே 17

இந்தியாவின் எல்லைப் புறத்தில் நடக்கும் எந்தத் தாக்குதலையும் முறியடிக்கத் தயாராகுங்கள் என்று படையினரை உஷார்படுத்தியிருக்கிறார் இந்திய இராணுவத் தளபதி ஜெனரல் பி எம் சர்மா-

இந்திய இராணுவ வீரர்களுக்கு பதக்கங்களை வழங்கும் வைபவம் ஒன்று நேற்று முன்தினம் புதுடில்லியில் நடைபெற்றது-

இந்த வைபவத்தில் உரை நிகழ்த்தும் போதே ஜெனரல் சர்மா மேற்கண்டவாறு கூறியிருக்கிறார்-

பாகிஸ்தானைக் கருத்தில் கொண்டே அவர் இப்படிக் கூறினார்-

இதேவேளை இந்தியப் பிரதமர் திரு விஸ்வநாத் பிரதாப் சிங் பாகிஸ்தான் தனது துருப்புகளை

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாம் தம்பிமுத்து படுகொலை

## கலாவும் இறந்துவிட்டதால்

## நேரடி சாட்சியம் இல்லை

— ரஞ்சன்

கொழும்பு, மே 17

தமிழர் விடுதலைக் கூட்டணி (ஈ பி ஆர் எல் எப்) உறுப்பினர் சாம் தம்பிமுத்து கொலை தொடர்பாக நேரடி சாட்சியமளிக்கவிருந்த ஒரே ஒரு சாட்சியான அவரது மனைவி கலா தம்பிமுத்துவும் இறந்துவிட்டார்- இதனால் பொலீஸ் விசாரணைகளில் சிறிது சிக்கல் ஏற்பட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளரான திரு ரஞ்சன் விஜேரத்ன கூறினார்-

திருமதி கலா தம்பிமுத்து இது சம்பந்தமாக வாக்குமூலம் எதுவும் அளிக்கமுடியவில்லை- விசேட கண்காணிப்புப் பிரிவில் தீவிர சிகிச்சை பெற்று வந்த அவர் கடைசி வரை வாக்குமூலம் அளிக்கும் நிலையில் இருக்கவில்லை என்றும் அமைச்சர் சொன்னார்-

கொலை தொடர்பாக தனியான பொலீஸ் குழு ஒன்று புலன் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது-

கொலையுடன் நேரடி தொடர்பு கொண்ட எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை- எனினும் தலைநகரில் தேடுதல் நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கும் பொலீஸார் பல தமிழ் இளைஞர்களைக் கைது செய்துள்ளனர் என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மேலும் குறிப்பிட்டார்- [உ-ய]

## ராகிங் என்ற பெயரில் மாணவிகள் மானபங்கமா?

### அரசாங்கம் அனுமதிக்காது

கொழும்பு, மே 17

"ராகிங்" என்ற பெயரில் இளம் மாணவிகள் மானபங்கப்படுத்தப்படுவதையோ அல்லது அவமானப்படுத்தப்படுவதையோ அனுமதிக்க முடியாது- பல்கலைக்கழகங்களில் ஒழுக்கமும் கட்டுப்பாடும் நிலைநிறுத்தப்படும்- அதற்கு வேண்டிய எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்-

தோட்டத் தொழிற்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்ன இவ்வாறு கூறினார்-

கொழும்பு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற அத்துமீறிய "ராகிங்" தொடர்பாக பத்திரிகையாளர்கள் எழுப்பிய கேள்விக்குப் பதில் அளிக்கும்போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்-

கொழும்பு பல்கலைக்கழகத்தில் ஒன்பது மாணவர்கள் இது தொடர்பாக கைது செய்யப்பட்டுள்ளனர்- இவர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு உபவேந்தரிடம் ஒப்படைக்கப்பட்டு உள்ளனர்-

(4ஆம் பக்கம் பார்க்க)

## சோமண்ணை



அப்ப பின்னை இங்கை இருக்கிறவையும் வெளிநாட்டுக்கு ஓடி போய் விட்டு திரும்பி வந்து பெரிய சம்பளம் பெறப்பார்ப்பினம் எல்லே!

## மலையக மக்கள் முன்னணி தலைவர் கைதானது ஏன்?

### பொலீஸ் மா அதிபர் விளக்கம்

கொழும்பு மே 17

பாதுகாப்புப் படையினரால் நுவரெலியாவில் கைது செய்யப்பட்ட ஆயுதம் தாங்கிய போராளிக் குழுவினர் தமது தலைவர் திரு பி சந்திரசேகரன் தான் என்று வாக்குமூலம் அளித்தனர்- அதைத் தொடர்ந்தே மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு பி சந்திரசேகரன் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டார்- அவர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படுவார்-

நேற்று நாடாளுமன்ற கட்டடத்தில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் பத்திரிகையாளர்

(2 ஆம் பக்கம் பார்க்க)

# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் ஏககாலத்தில் வானொலியில்

## அடுத்த ஏப்ரல் முதல் ஒலிபரப்பாகும்

எஸ் சூரியகுமாரன்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ஒரே சமயத்தில் வானொலியிலும் இனிமேல் கேட்கலாம்- அடுத்த வருடம் ஏப்ரல் மாதத்தில் இது அமுலுக்கு வரும்-

இந்த தகவலை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன தலைவரும் பணிப்பாளர் நாயகமுமான திரு ஹட்சன் சமரசிங்க நேற்று பத்திரிகையாளர்களிடம் தெரிவித்தார்-

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை வானொலியிலும் ஒலிபரப்புவதற்காக 1 கோடியே 60 லட்சம் ரூபா செலவில் தயாரிப்பு

(2 ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி.

## ஜீப் வி[illegible]த்தில் மஜீத் ச[illegible]னார்

கொழும்பு மே 17

வட மத்திய மாகாண சபை உறுப்பினர் ஜனாப் அப்துல் மஜீத் சென்ற ஜீப் நேற்று முன்தினம் அனுராதபுரம் சிறைச்சாலை அருகே வீதியை விட்டு விலகி குடை சாய்ந்தது-

இதனால் அவருக்கு சிறு காயம் ஏற்பட்டுள்ளது- ஆனால் ஜீப் பலத்த சேதத்துக்குள்ளாகியது- (இ—ற)

தனியார் போக்குவரத்து சேவைக்கென

# 4 ஆயிரம் சொகுசு பஸ்கள் இறக்குமதி

கொழும்பு மே 17

பொது மக்களுக்கு சிறந்த போக்குவரத்து சேவைகளை வழங்கும் வகையில் தனியார் பஸ் போக்குவரத்து சேவைக்கென 4000 சொகுசு பஸ்கள் இறக்குமதி செய்யப்படும் இதனை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் திரு விஜயபால மெண்டிஸ் கூறினார் அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது-

தனியார் துறையினருக்கு இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது-

இப்பஸ்கள் இறக்குமதி செய்வதற்கு சலுகை அடிப்படையில் வங்கிக் கடன்களும் வழங்கப்பட்டுள்ளன.

இன்னும் இரண்டொரு மாதங்களில் இந்த பஸ்கள் அனைத்தும் இங்கு வந்து சேர்ந்துவிடும் அதன்பின் போக்கு வரத்து நெருக்கடியை ஓரளவு சமாளிக்க முடியும்.

இவ்வாறு விஜயபால மெண்டிஸ் கூறினார். (இ—ய)

## இன்றைய திரைகளில்

5 வது வாரம்

ஜெஸிமா [கிராண்ட்பாஸ்] 2-00, 6-00, 9-30

கொன்கோட் தெஹிவளை 10-30, 2-00, 6-00, 9-00

வின்சர் [யாழ்நகர்] 10-30, 2-30, 6-00

பாக்யராஜ் — ஷோபனா சோமயாஜுலு — மனோரமா குமரிமுத்து நடித்த

**இது நம்ம ஆளு**

[கலர்]

6 வது வாரம்

சமந்தா (கொட்டகொடை) 10-00, 2-00, 6-00, 9-30

பிரின்ஸ் (ஹட்டன்) 2-30, 6-00 சனி/ஞாயிறு 10-30

ஸ்ரீதர் (யாழ்நகர்) 10-30, 2-30, 6-30

ரஜனிகாந்த் — ராதிகா நடித்த சத்யா மூவிஸ்

**ஊர்க்காவலன்**

(கலர்)

## பொலிஸார் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யவில்லை

### சந்தேக நபர்கள் விடுதலை

கொழும்பு மே 17

இரு சந்தேக நபர்கள் மீது பொலிஸார் குற்றப் பத்திரத்தை தாக்கல் செய்யாததால் அச் சந்தேக நபர்களை நீதிமன்றம் விடுதலை செய்தது

1987 ஆம் ஆண்டு ஜூலை முதலாம் திகதி புறக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டெலிகா வானை இவ்விரு சந்தேக நபர்களும் அனுமதியின்றி எடுத்துச் சென்றதாக பொலிஸார் இவர்களை கைது செய்தனர்- பின்னர் இவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்-

இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது சந்தேக நபர்கள் மீது குற்றப் பத்திரிகை தாக்கல் செய்ய பொலிஸ் தரப்பில் மேலும் அவகாசம் கோரப்பட்டது- இக் கோரிக்கைக்கு சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விஜித குமாரகே ஆட்சேபனை தெரிவித்தார்-

முதல் சந்தேக நபர் மேற்படி வாகனத்தின் உரிமையாளர்- சில சம்பவங்கள் காரணமாக புறக்கோட்டை பொலிஸாரினால் இவ் வாகனம் கைப்பற்றப்பட்டது-

பொலிஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து இந்த வாகனத்தின் திறப்பை வாங்கியே சந்தேக நபர் அன்றைய தினம் வாகனத்தை பொலிஸ் நிலையத்தில் இருந்து எடுத்துச் சென்றார்- ஆனால் சில பொலிஸ் உத்தியோகத்தர்களிடையே நிலவிய பகைமை காரணமாக இருவரும் கைது செய்யப்பட்டனர்-

இப்படி நீதிமன்றத்தில் தெரிவித்த சட்டத்தரணி பொலிஸாரின் வேண்டுகோளின்படி மேலும் அவகாசம் வழங்கப்படுமானால் அது சந்தேக நபர்களுக்கு செய்யப்படும் அநீதியாகவே கருத முடியும்-

இவ்விசாரணை மேற்கொள்ளப்படும் போதெல்லாம் இரு சந்தேக நபர்களும் தவறாது நீதிமன்றத்தில் சமூகமளித்து வந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டினார்-

சட்டத்தரணியின் இவ்வாதத்தை செவி மடுத்த நீதிமன்றம் இருவரையும் விடுதலை செய்தது- (இ—032)

## தொலைக்காட்சி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலையம் ஒன்று அமைக்கப்படும்-

நாடு முழுவதிலும் உள்ள மக்கள் நிகழ்ச்சிகளைத் தெளிவாகக் கேட்பதற்கு வசதியாக தெனியாய, அப்புத்தளை, மாத்தளைக்கு அருகில் உள்ள கரஹ்ராதென்ன, யாழ்ப்பாணம் ஆகிய நான்கு இடங்களில் டிரான்ஸ்மிட்டர் நிலையங்கள் ஏற்படுத்தப்படும்-

ஹோட்டல் லங்கா ஒபரோவில் தாம் நடந்த பத்திரிகையாளர் மாநாட்டில் திரு ஹட்சன் சமரசிங்க மேலும் கூறியதாவது-

பண்பலை ஒலிபரப்பிற்காக 17 டிரான்ஸ்மிட்டர்கள் பயன்படுத்தப்படுகின்றன- ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் தற்போது 8 மொழிகளில் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி வருகிறது-

வானொலி அனுமதிப் பத்திரங்கள் மூலம் 184 கோடி 40 லட்சம் ரூபா லாபமாக கிடைத்துள்ளது-

வங்கியில் இப்போது 4 கோடி ரூபா மூலதனமாக உள்ளது- மேலதிக வேலை நேரத்திற்கு மட்டும் 55 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது-

ஊழியர்களுக்கு விரைவில் 50 சதவீத சம்பள உயர்வு வழங்கக் கூடியதாக இருக்கும்- (உ—கு)

## அமைச்சர் தொண்டமான் அட்டன் விஜயம்

கொழும்பு மே 17

இ தொ கா தலைவரும் சுற்றுலா கிராமத் தொழிற்றுறை அபிவிருத்தி அமைச்சருமான திரு எஸ் தொண்டமான் நாளை சனிக்கிழமை அட்டனுக்கு விஜயம் செய்கிறார்-

இ தொ கா மாவட்டத் தலைவர்கள் மற்றும் இளைஞர் காங்கிரஸ் மகளிர் காங்கிரஸ் ஆசிரியர் காங்கிரஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கொண்ட கூட்டம் ஒன்றில் அமைச்சர் கலந்து கொள்கிறார்-

இக்கூட்டம் நாளை பிற்பகல் 2 மணிக்கு அட்டன் இந்து மகா சபை மண்டபத்தில் நடைபெறும் (இ—ந—096)

## ஹிங்குராகொடை வீட்டில் நகை கொள்ளையில் பாதுகாப்பு படை வீரர்களுக்கும் தொடர்பா?

கொழும்பு மே 17

ஹிங்குராகொடை வீடு ஒன்றில் 15 லட்ச ரூபா பெறுமதியான தங்க நகைகளைக் கொள்ளையிட்ட கோஷ்டியில் சில பாதுகாப்புப் படை வீரர்களும் அடங்கியிருந்தனரா என்ற சந்தேகம் பொலிஸாருக்கு எழுந்துள்ளது-

பத்து மாதங்களுக்கு முன் நடைபெற்ற இக் கொள்ளைச் சம்பவத்தை விசேஷ பொலிஸ் கோஷ்டியொன்று விசாரித்து வருகிறது-

இவ்விசாரணைகளின் போதே படை வீரர்களும் இக்கொள்ளையில் ஈடுபட்டிருந்தனரா என்ற சந்தேகம் ஏற்பட்டது-

இதே சமயம் இக்கொள்ளைக்குப் பொறுப்பானவர்களை விரைவிலேயே கண்டுபிடித்துவிடக் கூடியதாக இருக்கும் என புலனாய்வாளர்கள் நம்பிக்கை தெரிவித்துள்ளனர்-

ஹிங்குராகொடை செல்வந்தர் ஒருவரின் வீட்டினுள் புகுந்த முகமூடியணிந்த ஆறு கொள்ளையர்கள் வீட்டிலிருந்த குழந்தையை பணயக் கைதியாக பிடித்து வைத்துக் கொண்டு தங்க நகைகளைத் தரும்படி வீட்டாரை மிரட்டினர்

இதைத் தொடர்ந்து உறவினர் வீடொன்றில் வைக்கப்பட்டுள்ள நெல் மூடையில் நகைகள் இருப்பதாகக் கூறிய வீட்டார் நகைகளைக் கொள்ளையரிடம் கையளித்தனர்-

அச் சமயம் ஒரு கொள்ளைக்காரன் கீழே தடுக்கி விழுந்தபோது முகமூடி அகன்றது இதன் மூலம் அந் நபரது முகத்தை வீட்டாரால் அடையாளம் கண்டுகொள்ள முடிந்தது- (இ—032)

## தினபதி சிறு விளம்பரம்

### தேவை

பாணந்துறை பள்ளிமுல்லை அல்-தீனிய்யா அரபுக் கல்லூரிக்கு மூன்று முதர்ரிஸ்மார்கள் அவசரமாக தேவை- நல்ல சம்பளமும் குடும்பஸ்தராயின் கல்லூரிக்கு அண்மையில் இலவச வீடு வசதியும் செய்து கொடுக்கப்படும்- தொடர்பு கொள்க- அதிபர் அல் தீனிய்யா அரபுக் கல்லூரி, த பெ இல- 1, பள்ளிமுல்லை, பாணந்துறை-

வி இ 028531

### வாடகைக்கு உண்டு

315, கிராண்ட்பாஸ் வீதியில் அலுவலக வியாபார அல்லது களஞ்சியசாலை உபயோகத்திற்கு தகுந்த 2,000 சதுர அடி கொண்ட கட்டிடம் வாடகைக்கு உண்டு. தொடர்பு கொள்க- அல்ஹாஜ் நஜீப்தீன், சிட்டி சைக்கிள் ஸ்டோர்ஸ் 117, டாம் வீதி, கொழும்பு-12-

வி இ 028533

இன்று முதல்

முருகன் (ஜிந்துப்பிட்டி) 2-15, 6-15, 9-15

ஈரோஸ் (பாமன்கடை) 2-30, 6-00, 9-30

## மலையக....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கும்

இந்திய பிரஜாவுரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு திருப்பி

ஹஜ் யாத்திரை 1990

அஸ்ஸலாமு அலைக்கும்

அன்புள்ள சகோதர/சகோதரிகளே!

இன்ஷா அல்லாஹ்! இவ்வருடம் புனித ஹஜ் பயணத்தை மேற்கொள்ள விரும்பும் ஹாஜிகளுக்கு சகல ஏற்பாடுகளும் செய்து கொடுக்க

FUJI TRAVELS (PVT) LTD.,

பூஜி டிரவல்ஸ் (பிரைவட்) லிமிட்டெட்

முன்வந்துள்ளது

உங்கள் தேவையே எமது சேவை

ஹஜ் விளம்பரம் - வர்ணிப்புக்கள் எழுதி ஹாஜிகளை ஏமாற்றும் நோக்கம் எமக்கு இல்லை-

## இன்று முதல்

**முருகன்** — **ஈரோஸ்**

(ஜிந்துப்பிட்டி) 2-15, 6-15, 9-15 சனி/ஞாயிறு 10-15

(பாமன்கடை) 2-30, 6-00, 9-30 சனி/ஞாயிறு 10-30

பயங்கர சண்டைக் க்காட்சிகள்

இனிமையான பாடல்கள் நிறைந்த சித்திரம

அர்ஜுன் — சகிகலா

சீ்தா — செந்தில்

பேபி ஷாலினி — சரத்பாபு நடித்த



# சங்கர் குரு

(கலர்)


# மலையக....

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

ளர் எழுப்பிய கேள்வி ஒன்றிற்கும பதில் அளித்த பொலீஸ் மா அதிபர் திரு ஏனஸ்ட் பெரேரா மேற் கண்டவாறு கூறினார்-

திரு சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதை ஆட்சேபித்து தலவாக்கொல்லை பிரதேசத்தில் சுமார் 2000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர் எனினும நேற்று வியாழக்கிழமை பெருமபாலானோர் வேலைக்குத் திரும்பி விட்டனர்-

இரண்டு தோட்டங்களில் சுமார் 400 பேர் தொடர்ந்து வேலை நிறுத்தம செய்து வருகின்றனர் என்றும பொலீஸ் மா அதிபர் சொன்னார்-

இந்திய பிரஜாவுரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும திட்டம தொடர்பாக அங்கு எந்தவிதமான ஆர்ப்பாட்டங்களும நடைபெறவில்லை-

திரு சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதற்கும் இந்தியப் பிரஜாவுரிமை பெற்றவர்களை இந்தியாவுக்கு திருப்பி அனுப்பும திட்டத்திற்கும எவ்வித தொடர்பும இல்லை என்றும பொலீஸ் மா அதிபர் கூறினார்- நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படும சந்திரசேகரனை நீதிமன்றம பிணையில் விடுவிக்குமானால் தாம அதை ஆட்சேபிக்கப் போவதில்லை என்றும பொலீஸ் மா அதிபர் சொன்னார்- (உ—ய)

# மிளகாய்,....

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

கள் வருமாறு-

* இழுபறி நிலையில் உள்ள சார்க் உச்சி மாநாட்டு விவகாரம தொடர்பாக இலங்கையும மாலைதீவும கூழுக மாக பேசி ஒரு முடிவை எடுக்க வேண்டும என இந்தியப் பிரதமர் திரு வி பி சிங ஆலோசனை தெரிவித்துள்ளார்-
* வடக்கு. கிழக்கு மாகாண சபை தொடர்பாக இதுவரை எந்த முடிவும எடுக்கப்படவில்லை- ஜனாதிபதி இது தொடர்பாக தீவிரமாக பரிசீலனை செய்து வருகின்றார்-
* ஈ பி ஆர் எல் எப் இயக்கத்திற்கும. அரசாங்கத்திற்கும இடையிலான பேச்சுவார்த்தை ஆரோக்கியமாக இருந்தது- கன்னிச்சையான கனிநாடு பிரகடனம் தொடர்பாக அவர்கள் தமது நிலைப்பாட்டை விளக்கினர்-

அவர்கள் முன் வைத்துள்ள 19 கோரிக்கைகள், சர்வகட்சி மாநாட்டில் பரிசீலனை செய்யப்படும் என அரசாங்கத்தினால் இணக்கம தெரிவிக்கப்பட்டது- சனிக்கிழமை நடைபெறவுள்ள சர்வ கட்சி மாநாட்டு பிரதிநிதிகள் கூட்டத்தில் ஈ பி ஆர் எல் எப் உறுப்பினர்கள் கலந்து கொள்வார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது-

* புலிகளுடனான அடுத்த பேச்சு வார்த்தை எப்போது என்பது தீர்மானிக்கப்படவில்லை- அவசியம ஏற்படும்போது நடைபெறும- ஈ பி ஆர் எல் எப், எஸ் டி டி ஈ உட்பட எல்லா தமிழ் இயக்கங்களையும ஒன்றுபடுத்துவதே அரசின் நோக்கும-
* சிறிய கொள்ளைச் சமபவம் தொடர்பாக மேலும நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்- இவர்கள் ஜே வி பி யுடன் தொடர்புடையவர்கள் என தெரிய வந்துள்ளது-
* அரசின் வேண்டுகோளை ஏற்று இன்று வரை 133 தீவிரவாத இளைஞர்கள் சரண் அடைந்துள்ளனர்- 1804 துப்பாக்கிகள் கைப்பற்றப்பட்டுள்ளன- மேலும 4239 துப்பாக்கிகள் மீளப் பெறப்பட்டுள்ளன- [உ-ய]


முன்வந்துள்ளது

உங்கள் தேவையே எமது சேவை

ஹஜ் விளமபரம - வர்ணிப்புக்கள் எழுதி ஹாஜிகளை ஏமாற்றும நோக்கம எமக்கு இல்லை-

தங்கும இடங்கள், பஸ் வண்டிகள் யாவும சவூதியில் ஏற்பாடு செய்யப்பட்டு விட்டன-

மடுவம முதல் மாடிக் கட்டடம வரை வண்டிகள் உட்பட குளிரூட்டப்பட்டவைதான்- இதில் புதினம ஒன்றும இல்லை-

உங்கள் நாட்டம எதுவோ அவை யாவும இன்ஷா அல்லாஹ் நாட்டப்படி நடக்கும-

பாஸ்போர்ட், விஸா, அந்நியச் செலாவணி யாவும செய்து கொடுக்கப்படும- இன்ஷா அல்லாஹ் ஜூன் மாத நடுப்பகுதியில் நமது ஹஜ் குழு புறப்படும-

மக்காவில் தங்குவதற்கு

**DAR AL - GHAZZA**

ஹோட்டலை தெரிவு செய்துள்ளோம-சிறந்த மௌலவிமார் வழிகாட்டிகளாகச் செல்கின்றனர்-

ஹஜ் வரி, மக்கா - மதீனா பிரயாணம உட்பட சகல செலவுகளும

37,800-00 ரூபா மட்டுமே

[விமான டிக்கட், குர்பான் இதில் சேர மாட்டாது]

தொடர்பு கொள்க —

**M. S. MOHAMED FAIZER**

**FUJI TRAVELS (PVT) LTD.,**

[ஸாம குரூப் குழுவில் அங்கம]

81, Galle Road Colombo—4 Phone: 580164

- Al Haj A R M Saleem, 6. Park Garden off Park Road, Colombo — 5 Phone: 587105
- Al Haj S Y M Abdul Razak, Abdul Razak Mawatha, Beruwela
- M Mohamed Faris, 404. Main Street, Ratnapura
- M Y M Fazil, 22, Puttalam Road, Nikawaratiya
- M C M Imthiyas, 25. Jabir Avenue, Beruwela 034—55272

கும்புக்கந்துறை

# முஸ்லிம் கிராமம்

# புதுப் பொலிவு பெறும்

தெல்தெனிய மே 16

குண்டசாலை தொகுதியைச் சேர்ந்த குப்புக்கந்துறை முஸ்லிம் கிராமம் பள்ளேகலை கிராம எழுச்சித் திட்டத்தின் கீழ் புதுப்பொலிவு பெறவுள்ளது.

இத் திட்டத்தின் கீழ் இக் கிராமத்தில் உள்ள ஜும்ஆப் பள்ளிவாசல், பாடசாலை, பாதை ஆகியன புனரமைப்புச் செய்யப்பட உள்ளன.

இக் கிராமத்தினூடாகச் செல்லும் பாதை லட்சக்கணக்கான ரூபா செலவில் செப்பனிடப்படும் இதற்கான வேலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டு முடியும் தருவாயில் உள்ளன.

பள்ளிவாசலில் வர்ணம் தீட்டல், மதில் அமைத்தல், சிறு சிறு திருத்த வேலைகள் நடைபெற உள்ளன. இக் கிராமத்தில் காணப்படும் முஸ்லிம் மகா வித்தியாலயம் சுமார் இரண்டரை லட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்படவுள்ளது.

1990 ஆம் ஆண்டு கிராம எழுச்சித் திட்டத்தை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச எதிர்வரும் 20ஆம் திகதி ஆரம்பித்து வைப்பார். ஜனாதிபதி இத்திட்டத்தை ஆரம்பித்து வைக்க பள்ளேகலைக்கு விஜயம் செய்யும் போது மிகவும் பழமை வாய்ந்த இக் குப்புக்கந்துறை கிராமத்துக்கும் விஜயம் செய்வார். (இ)

# ஆசிய அபிவிருத்தி வங்கி

# 15 கோடி டாலர் உதவி

## வழங்குமென எதிர்பார்ப்பு

கொழும்பு, மே 17

ஆசிய அபிவிருத்தி வங்கி இலங்கைக்கு 15 கோடி அமெரிக்க டாலரை உதவித் தொகையாக வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

புதுடில்லி ஆசிய அபிவிருத்தி வங்கியின் 23 ஆவது வருடாந்த ஆளுனர் சபைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தே இலங்கை மேற்கண்ட தொகையைக் கடனாகப் பெறக்கூடிய சாத்தியம் தோன்றியது.

கடந்த ஆண்டு ஆசிய அபிவிருத்தி வங்கி 15 கோடியே 70 லட்சம் டாலரை இலங்கைக்கு வழங்கியது.

இவ்வாண்டு விவசாய, எரிசக்தி மின்சக்தி மற்றும் கைத்தொழில் ஆகிய துறைகளின் அபிவிருத்திக்கென 15 அல்லது 20 கோடி ரூபா உதவித் தொகையாக வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதியமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

நாடு இப்போது பல்வேறு மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்பு திட்டங்களை நடைமுறைப்படுத்தக் கூடிய நிலையில் இருப்பதால் மேற்படி வங்கி உதவி கிடைப்பதற்கான சாத்தியம் காணப்படுகிறது என்று இவர் மேலும் தெரிவித்தார்.

டில்லி பேச்சு வார்த்தைகளின் முடிவுகள் எதிர்வரும் மாதங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியால் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும். (ல-032)



## கண்டியில் கசிப்பு அருந்திய மூவர் மரணம்

கொழும்பு, மே 17

கண்டி, மாகியாவ என்னும் இடத்தில் கசிப்பு அருந்தியதில் மூவர் மாண்டனர்.

உயிரிழந்தோர் கண்டி நகர சபை ஊழியர்கள் என சொல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் கடந்த

# பிரதேச பல்கலைக் கல்லூரி:

# அமைத்தல்பற்றி ஆராய குழு

கொழும்பு, மே 17

உயர்கல்வி திட்டத்தை மாற்றி அமைத்தல், பிரதேச பல்கலைக்கழக கல்லூரிகள் அமைத்தல் என்பன குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்கவென விசேஷ கமிட்டி ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு இக் கமிட்டியை நியமித்துள்ளது.

இதேவேளை உபவேந்தர்கள் மேற்படி இரு விடயங்கள் குறித்து தனித் தனியாக ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடத்துவர்.

மேற்படி இரு விடயங்களும் தம்மையே பெரிதும் பாதிப்பதால் இவ்வாறு தனித் தனியாக பேச்சுவார்த்தை நடத்துவது எனத் தீர்மானித்திருப்பதாக உபவேந்தர்கள் தெரிவிக்கின்றனர். [ண—ர]

# பாடசாலைகளில்

# தொழிற் பயிற்சி பாடநெறி

மாத்தறை, மே 16

மாத்தறை மாவட்டத்தில் படித்து வேலை வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளின் நன்மை கருதி பாடசாலைகளில் 30 தொழில் பயிற்சி பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாத்தறை, வெலிகம, அக்குரஸ்ஸ, கம்புறுபிட்டிய, தெவிநுவர, ஹக்மனை, தெனியாய ஆகிய ஏழு தேர்தல் தொகுதிகளிலும் இந்த 30 தொழில் பயிற்சி பாட நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

20 முழு நேர பாடப் பயிற்சி நெறிகளும், 10 பகுதி நேர பாட பயிற்சி நெறிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தையல் பயிற்சி, மின் இணைப்பு, பூ வேலை, மோட்டார் கார் திருத்துதல், வெல்டிங் வேலை, தச்சு வேலை, மர வேலை போன்ற பல்வேறு தொழில் பயிற்சி பாட நெறிகள் நடைபெற்று வருகின்றன.

ஜூகி தையல் பயிற்சி பெற்ற நூற்றுக்கணக்கான யுவதிகள் சுதந்திர வர்த்தக வலயத்தில் வேலை வாய்ப்பு பெற்றுச் சென்றுள்ளதாக மாத்தறை கல்வி அலுவலக வளர்ந்தோர் கல்வி அதிகாரி திரு பி ஏ டி ஏ வீரநாயக்கா தெரிவித்தார்.

மாத்தறை மாவட்ட கல்வி அலுவலகத்தின் வளர்ந்தோர் கல்விப் பிரிவு இந்த தொழிற் பயிற்சி பாட நெறிகளை ஆரம்பித்துள்ளது. (ஐ—430)





## தராதரப் பத்திரம் வழுங்கல்

புத்தளம மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 175 தமிழ் மொழு மூல ஆசிரிய பயிலுநர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் புத்தள பாததிமா மகளிர் மத்திய கல்லூரியில் நடைபெற்றது-

ஒன்பது தினஙகள் நடைபெற்ற இப் பயிற்சியைப் பூர்த்தி செய்து கொண்டவர்களுக்கு தராதரப் பத்திரஙகளும வழஙகபபட்டன-

புத்தளம கோட்டக் கல்வி அலுவலக துணைப் பணிப்பாளா ஜனாப் ஏ ஜே எம ஜலீல், பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரிய பயிலுநர் மாணவியொருவருக்கு தராதரப் பத்திரததை வழஙகுவதைப் படத்தில் காண்க-

பயிற்சி விரிவுரையாளர் ஜனாப் ஏ எம நஜீமுத்தின் ஆசிரியரும படததில் காணப்படுகின்றார்-

[படம; ஏ எஸ் புல்கி புத்தளம நிருபர்]

[இ-241]

## மூவர் மரணம்

கொழுமபு, மே 17

கண்டி, மாகியாவ என்னும இடத்தில் கசிப்பு அருந்திய தில் மூவர் மாண்டனர்.

உயிரிழந்தோர் கண்டி நகர சபை ஊழியர்கள் என சொல்லப்பட்டது.

இந்தச் சமபவம கடந்த ஞாயிறு கண்டியில் நடந்தது.

கசிப்புடன் "தின்னர்" என்ற திரவகத்தையும இவர்கள் கலந்து குடித்ததாக கூறப்படுகின்றது.

இதை அருந்தியவர்களுக்கு கடுமையான நெஞ்சுவலி ஏற்பட்டது. மூவரும கண்டி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் உயிரிழந்தனர். (நு-455)

## தங்கக் கடத்தல்: விமான பயணிக்கு பிணை

கொழுமபு, மே 17

தஙக பிஸ்கட் கடத்தல் சமபவம தொடர்பாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த விமானப் பயணி ஒருவர், 75 ஆயிரம ரூபா ரொக்கப் பிணையிலும 5 லட்சம ரூபா சரீரப் பிணையிலும செல்ல அனுமதிக்கப்பட்டார்-

கொழுமபு, ஆட்டுப்பட்டித் தெருவைச் சேர்ந்த நூபர் ஒருவரே இவ்வாறு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டவர்-

ஒரு லட்சத்து 39 ஆயிரம ரூபா பெறுமதியான எட்டு தஙக பிஸ்கட்டுகளை இந்தியாவுக்குக் கடத்திச் செல்ல முற்பட்டார் என்ற குற்றஞ்சாட்டின் பேரிலேயே இவரை கட்டுநாயக்கா பொலிஸார் நீர்கொழும்பு மாஜிஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்தனர்-

தஙக பிஸ்கட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன- எனினும இவர் அபராத தொகையை செலுத்த தவறியதை அடுத்தே விளக்க மறியலில் வைக்கப்பட்டார்- [ல-வ]


## இரத்தினபுரி கூட்டுறவு சங்க தேர்தலில் சுதந்திர கட்சி வெற்றி

இரத்தினபுரி பல நோக்கு கூட்டுறவு சஙகத் தேர்தலில் ஸ்ரீலஙகா சுதந்திரக் கட்சியின் ஆதரவுடன் போட்டியிட்ட வேட்பாளர்கள் அமோக வெற்றியீட்டினர்-

இரத்தினபுரி பல நோக்குக் கூட்டுறவு சஙகத்திலுள்ள 32 கூட்டுறவு சஙகக் கடைகளிலிருந்த 133 பிரதிநிதிகளை தெரிவு செய்யுமுகமாக மேற்படி தேர்தல் நடைபெற்றது- இதில் சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களான 68 பேர் வெற்றியீட்டியமை குறிப்பிடத்தக்கது-

இரத்தினபுரி பல நோக்குக் கூட்டுறவு சஙகத் தலைவர் திரு சுமித் அமரசிஙகவின் தலைமையில் நடைபெற்ற புதிய பணிப்பாளர் சபைக்கான தேர்தலில் தெரிவான 7 பேரும (பணிப்பாளர்கள்) சுதந்திரக் கட்சி ஆதரவாளர்களாவர்-

இவர்களில் இரத்தினபுரி பிரதி மேயர் திரு ஏ ஏ விஜேபால, மாநகர சபை உறுப்பினர் திரு டி டி பி எஸ் பண்டார, இரத்தினபுரி மாவட்ட எம் பி திரு கபில அபேரட்னவின் அந்தரஙகச் செயலாளர் திரு எம் ஏ சரத் ஜயவர்தன ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்-

ஹஜ் பயணிகளுக்குப் பல்வேறு விசேட வசதிகளை வழங்கி உதவ இலங்கை வங்கி மீண்டும் முன்வந்துள்ளது.

**விமானக் கட்டணம்**

பயணம் செய்யவிருப்போர் தமது விமானப் பயணக் கட்டணத்தை எந்தவொரு இலங்கை வங்கிக் கிளையிலும் கையளிக்கலாம். வங்கி இப் பணத்தை முஸ்லிம் மத, கலாசார விவகாரத் திணைக்களத்தின் ஹஜ் யாத்திரைக் கணக்கில் வைப்புச் செய்யும். பணம் செலுத்தியதற்கான உத்தியோகபூர்வ பற்றுச்சீட்டை வங்கி வழங்கும்.

**வெளிநாட்டு நாணயமாற்று**

வெளிநாட்டு நாணய மாற்று வாங்குவதற்கான ரூபா தொகையை இலங்கை வங்கிக் கிளைகளில் வைப்புச் செய்து, கட்டணம் எதுவுமின்றிக் கொடுப்பனவுக் கட்டளையைப் பெறலாம். கீழ்க் காணப்படும் பிரிவு ஒன்றில் இந்தக் கொடுப்பனவுக் கட்டளைப் பத்திரத்தைச் சமர்ப்பித்துப் பின்வரும் வழிகளில் வெளிநாட்டு நாணயமாற்றைப் பெறலாம்:

பயணத்தர் காசோலைகள் /ஹஜ் சேவைக் கொடுப்பனவுக்காசோலைகள்/வெளிநாட்டு நாணயம் என்பன அடிப்படை அலவன்ஸ், விசேட ஹஜ் அலவன்ஸ் ஆகியவற்றுக்கு அமைய வழங்கப்படும்.

**விசேட கருமபீடங்கள்**

விமானக் கட்டணத்தை வைப்புச் செய்யவும் வெளிநாட்டு நாணயமாற்று வழங்கவும் பின்வரும் கருமபீடங்கள் திறந்திருக்கும்

1. **இலங்கை வங்கிப் பயணக் கருமபீடம்**
   வக்பு சபைக் கட்டடம்
   சி 47, கெப்பிற்றிபொல மாவத்தை
   கொழும்பு 5
2. **பயணத் திணைக்களம்**
   தலைமை அலுவலகக் கட்டடம் (தரை மாடி)
   கொழும்பு 1
   தொலைபேசி : 545783
3. **நாணயமாற்றுப் பணியகம்**
   இலங்கை வங்கி
   யோர்க் வீதி
   கொழும்பு 1
   தொலைபேசி : 422730
4. **இலங்கை வங்கி**
   பயணப் பிரிவு/எயர்லங்கா அலுவலகம்
   இல. 14, சேர் பரன் ஜயதிலக மாவத்தை
   கொழும்பு 1
   தொலைபேசி : 421291
5. **இலங்கை வங்கி**
   சர்வதேசப் பிரிவு
   நுகேகொடை
   தொலைபேசி : 553904

மேலதிக விசாரணைகளுக்கு-
ஜனாப் எம ஏ நவாஸ், ஒபரேஷன் மனேஜர்
மேல் மாகாண பிரிவு 11
யோர்க் வீதி, போன்- 449063

BANK OF CEYLON

**இலங்கை வங்கி**
**தேசத்தின் வங்கியாளர்**

GBI BOC 4524

தினபதி

தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613

— 1990 மே 18 —
சுடர் 18 கதிர் 4486

# பற்றற்று வாழ்பவரே உலகில் குற்றமற்றவர்

## ஆண்டவன் அருள் அவர்களுக்கு உண்டு

பல்வேறு மனிதர்கள் பல்வேறு தெய்வங்களிடம மனதைப் பறிகொடுத்து பக்தி செய்துள்ளார்கள்- செய்தும வருகிறார்கள் இவைகளில் முருகனைப் போற்றி வழிபட்டு அவனது புகழ் பாடியுள்ளனர்-

"மாசிலுயிருக்குயிரு மாசிலு

— வைரம் ராஜகோபால் —

ணர்வுக்குணர்வும வானி லணுவுக் கணுவு பாயக்காரனும குற்றமற்றவர் உளத்தில் உறைவோனே குக்குடக் கொடி தரித்த பெருமானே" என்று முருகனைக் குறித்து பாடியுள்ளார்-

கோழியைக் கொடியில் வைத்துள்ளான்- கோழி கூவுகிறது- இருள் அகல்கிறது-

முருகனை வழிபட்டால் ஞானமாகிற கோழி கூவுகிறது- அஞ்ஞானமாகிற இருள் அகல்கிறது- எந்த ஜீவனின் உணர்ச்சியில் முருகன் உதிக்கிறானோ அங்கே ஞானோதயம ஏற்படுகிறது-

கிருபாகரன், ஞானாகரன் என்றெல்லாம பெயர் படைத்தவன் முருகன்- ஆண்டவனைப் பற்றினால் உயிருக்கு உயிர் கொடுப்பான்-

உயிருக்கு உயிராகி நிற்கும முருகனைக் கைவிடாது பற்ற வேண்டும ஆனால் அந்த உயிர் (ஜீவன்) மாசில் உயிராக இருக்க வேண்டும-

மாசு என்றால் குற்றம- எது குற்றம? எல்லாம ஓருயிர் என்பதை மறந்த வேற்றுமை

பாராட்டி பிறருக்குத் துரோகம செய்து வெளிவேஷம போடுவது குற்றம-

ஆசாபாசங்களைத் துறந்தவர்களே பற்றற்றவர்கள்- பற்றற்றவரே குற்றமற்றவர்-

இப்படிப் பட்டவர்களுக்கே ஆண்டவனோடு அனுபவிக்கவும் தொண்டர்களுடன் கூடவும

மிகவும ஆவல் ஏற்படுகிறது-

அப்படிப்பட்ட உயிர்களிடத்தே தான் முருகனுக்குப் பிரியம- அவர்களுடைய இதயம சுத்தமாக இருப்பதால்தான் முருகனும அங்கே நடம புரிய வாழ்கிறார்-

மாசற்று நிற்கும தொண்டர்களின் உள்ளத்தே முருகன் இருக்கிறான்- மாசு படர்ந்த உள்ளங்களில் அவன் இல்லையா என்றால் இருப்பான் ஆனால் அவனது அருள் கிடைக்காது-

அவனது அருள் இல்லையேல் அவ்வுயிர்க்கு என்ன பயன்? முருகன் எல்லா உயிர்க்கும அருள் புரியத் தயாராக இருக்கிறான்-

ஆனால் அதைப் பெற்றுக் கொண்டு உயிர் பண்பட வேண்டுமானால் மனம எனும பாத்திரத்தில் தான் பெற்றுக் கொள்ள வேண்டும-

இந்த மனம என்னும பாத்திரம மாசற்ற சுத்தமாக இருக்க வேண்டுமே!

பாத்திரத்தில் குற்றமிருந்தால் பால் கெட்டுவிடுகிறது-

மனதில் குற்றமிருந்தால் அருள் கெட்டுவிடுகிறது-

மாசில்லாத உயிர் மாசற்ற உணர்ச்சியை வளர்க்கும- தெய்வ உணர்ச்சி மிகவும நுட்பமானது-

### வெள்ளி விருந்து

யாவருக்கும கிடைப்பது அரிது

முருகனை முழு மனதுடன் நாடி, வருந்தி வழிபட்டால் அவனருள் கிட்டும-

"உமது உணர்ச்சிகளும தெய்வீக உணர்ச்சிகளாகி விடும" என்றார்கள்-

எங்கும இல்லாது போலிருந்தும எங்கு நிறைந்து நிற்பவன் முருகன்-

நாம அறிந்து கொள்ள வேண்டும- முருகனடியார்களுடன் நெருங்கிப் பழக வேண்டு மனம முருகனையே தியானிக்க வேண்டும- அவன் ஓடி வருவான்!

[ம-10]

## ஓய்வூதியம் கிடைப்பதில் தாமதம்

ஓய்வு பெறும ஆசிரியர்களுக்குரிய ஓய்வூதியம விரைவில் அவர்களுக்குக் கிடைக்கத் தக்க நடவடிக்கை எடுப்பதாக உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத்முதலி உறுதி அளித்திருக்கிறார்-

கேகாலைப் பிராந்தியப் பாடசாலை அதிபர்கள் கூட்டத்தில் அமைச்சர் அத்துலத்முதலி கலந்து கொண்டார்-

ஓய்வு பெறும ஆசிரியர்கள் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு நீண்ட காலம செல்கிறது- அவ்வளவு காலமும ஆசிரியர்கள் பல அலுவலகப் படிகளில் ஏறி இறங்கி அலைந்துழிய வேண்டியிருக்கிறது-


எத்தனையோ ஆசிரியர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம கிடைப்பதற்கு நீண்ட காலம பிடிப்பதால் பட்டினி கிடக்க வேண்டிய அவலமும ஏற்படுகிறது-

இப்படியெல்லாம அதிபர்கள் பலரும அமைச்சரிடம தெரிவித்தனர்-

அப்போது அமைச்சர் உண்மையில் இது வேதனை தரும விஷயம என்றார்-

உன்னத சேவையாற்றும ஆசிரியர்கள் அவர்களது அந்திம காலத்தில் தமக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியத்தைப் பெறுவதற்காக அங்கு மிங்கும அலைய வேண்டியுள்ளது-

பைல்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று கல்விப் பணி



### காசோலை கையளிப்பு

லிபிய இஸ்லாமிய அழைப்பு நிறுவனம மாளிகாவத்தை வை எம எம ஏ தேசியக் கவுன்சிலின் பணிகளுக்காக 1,50,000 ரூபா நிதியை அன்பளிப்பு செய்துள்ளது-

கவுன்சிலில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் லிபிய இஸ்லாமிய அழைப்பு நிறுவனப் பிரதிநிதி ஜனாப் முப்தா அகாட் கவுன்சில் தலைவர் ஜனாப் ஏ ஆர் நஜிமுத்தீனிடம இத் தொகைக்கான காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம-

(ஐ-007)

### தயாராக....

(1 ஆம பக்கத் தொடர்ச்சி)

இந்திய எல்லைக்கோடு வரை நகர்த்தி விட்டது என்று குற்றம சுமத்தியிருக்கிறார்-

பிரதமர் சிங பாதுகாப்பு அமைச்சுக்கும பொறுப்பாக இருக்கிறார்-

நாடாளுமன்ற விசேட துணைக் குழுக்கள் கூட்டத்தில்

## ஜ. தொ. கா ரஞ்சன் சந்திப்பு 21இல்

கொழும்பு, மே 17

ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் தூதக்குழு ஒன்று, தோட்டத் தொழிற்துறை அமைச்சரும, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு ரஞ்சன் விஜேரத்னவை எதிர்வரும 21-ஆம திகதி சந்திக்க இருக்கிறது.

இந்திய பாஸ்போர்ட் பெற்றிருக்கும இந்தியர் தொடர்பாக இந்தக் குழு அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்தும.

இது தொடர்பாகப் பேசுவதற்கு ஜ தொ கா அமைச்சருக்கு கடிதம அனுப்பி இருந்தது.

அக்கடிதத்தைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்கு வருமாறு திரு ரஞ்சன் விஜேரத்ன, ஜ தொ காவுக்கு கடிதம எழுதி இருக்கிறார் என பொதுச் செயலாளர் திரு வி பி கணேசன் தெரிவித்தார்.

(ந-ங)

## முதலாம் ஆண்டிலிருந்து வார இறுதி நாட்களில் ஆங்கிலபோதனை

கொழும்பு, மே 16

ஆங்கில மொழி போதனைக்கான வசதிகள் கொண்ட பாடசாலைகளில் முதலாம ஆண்டு தொடக்கம மாணவர்களுக்கு ஆங்கிலத்தை வார இறுதி நாட்களில் கற்பிக்க கல்வி அமைச்சு முடிவெடுத்துள்ளது-

அகில இலங்கை அரசினர் ஆங்கில ஆசிரியர் சங்க தூதுக் குழு சமீபத்தில் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலியை அவரது அலுவலகத்தில் சந்தித்த போது இத்தகவலை அமைச்சர் தூதுக் குழுவிடம தெரிவித்தார்.

பிற்பகல் நேரத்தில் விசேஷ ஆங்கில வகுப்புகள் யாழ்ப்பாண பாடசாலைகளில் ஏற்கனவே நடைபெற்று வருவதை மேற்படி தூதுக் குழுவுக்கு அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

ஆங்கில ஆசிரியர் சங்கமும இதுபோன்று மாலை நேர ஆங்கில வகுப்புகளை நடத்த முன் வர வேண்டும என அவர் கேட்டுக் கொண்டார்.

மாலை நேர ஆங்கில வகுப்புகளை நடத்த முன் வந்தால் தேவையான வசதிகள் செய்து கொடுக்கப்படும. பாடசாலை அபிவிருத்தி சங்கங்கள் இந்த ஆங்கில வகுப்புகளை நடத்த முன்வந்தால் ஒரு மாணவரிடமிருந்து ஒரு ரூபா வீதம கட்டணமாக அறவிடமுடியும.

இதன் மூலம ஆங்கில ஆசிரியருக்கு மணித்தியாலமொன்றுக்கு 40 ரூபா என்ற அளவில் ஊதியம வழங்கலாம என்றும தூதுக் குழுவிடம அமைச்சர் யோசனை தெரிவித்தார்.

மேற்படி தூதுக் குழுவில் ஆங்கில ஆசிரியர் சங்கத் தலைவர் எம ஏ ஸ்டான்லி பெரேரா, திருவாளர்கள் மேர்வின் குணசேகர, டி வி சோமபால, டக்ளஸ், ஏ எல் ய பெரேரா, திருமதி டொறின் குப்பு கொட்டுவ, திருமதி ரஞ்சனி சில்வா, திருமதி சுரபா பெரேரா ஆகியோர் இடம பெற்றிருந்தனர். (இ-032)

## இஸ்ரவேலுக்கு அன்று காவடிதூக்கியவர்கள் இன்று அகற்றி விட்டதாக தம்பட்டம்

இல்யாஸ் கூறுகிறார்

## கலைஞர் பேரவை அறிமுக விழா

கொழும்பு, மே 16

ஸ்ரீலங்கா தேசிய கலைஞர் பேரவை என்ற புதிய அமைப்பின் அறிமுக விழா எதிர்வரும 20-ஆம திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு மருதானை

ஆசிரியர்கள் அவர்களது அந்திம காலத்தில் தமக்குக் கிடைக்க வேண்டிய ஒய்வூதியத்தைப் பெறுவதற்காக அங்கும் இங்கும் அலைய வேண்டியுள்ளது.

பைல்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்று கல்விப் பணியகங்களில் ஒய்வூதியத் தாமதத்திற்குக் காரணம் கூறப்படுகிறது. இதனால் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் விரக்தியும், வேதனையும் அடைகிறார்கள் என்றும் அதைத் தாம் நன்கு அறிந்து கொண்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

"இந்த நிலைக்குத் தீர்வு கண்டாக வேண்டும். இதில் நான் தீவிர கவனம் செலுத்தி சரியான நடவடிக்கை எடுப்பேன். ஒய்வூதியம் விரைவில் கிடைக்க வழி செய்வேன்" என்று அமைச்சர் உறுதி அளித்தார்.

ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மட்டுமன்றி அரசாங்க ஊழியர்கள் அனைவருமே ஒய்வூதியத் தாமதத்தால் பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

ஒய்வூதியத் தாமதம் நீக்கப்படும் என்று இதற்கு முன்னரும் பல தடவைகள் எத்தனையோ அமைச்சர்களால் உறுதி அளிக்கப்பட்டது.

ஒய்வூதியத்தை விரைவில் வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அமைச்சரவை வெகு காலத்துக்கு முன்னர் தீர்மானித்தது.

அப்படியிருந்தும் ஒய்வூதியத் தாமதம் நீங்கியபாடாக இல்லை.

உயர் கல்வி அமைச்சர் அத்துலத் முதலியாவது தாம் அளித்த உறுதிப்படி ஒய்வூதியம் விரைவில் கிடைக்க வழி செய்வாரா என்று ஆசிரியர்கள் அங்கலாய்க்கிறார்கள்.

---

இந்திய எல்லைக்கோடு வரை நகர்த்தி விட்டது என்று குற்றம் சுமத்தியிருக்கிறார்.

பிரதமர் சிங் பாதுகாப்பு அமைச்சுக்கும் பொறுப்பாக இருக்கிறார்.

நாடாளுமன்ற விசேட துணைக் குழுக்கள் கூட்டத்தில் பிரதமர் சிங் உரையாற்றினார். அங்கு வைத்தே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

நெருக்கடி நிலைமையை பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க இயலாதிருக்கிறது என்றும் அவர் சொன்னார்.

பாகிஸ்தான் அதன் துருப்புகளை எங்கெங்கு நகர்த்தியிருக்கின்றது என்ற விவரங்களை சிங் வெளியிடவில்லை.

ஆயினும் இந்திய செய்திப் பத்திரிகைகள் சில வெளியிட்டிருக்கும் தகவல்களின் படி ஜம்மு பிராந்தியத்திலேயே துருப்புகள் நகர்த்தப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

கடந்த 10 ஆம் திகதி பாகிஸ்தான் அதன் தாங்கிகளையும் மற்றும் யுத்த உபகரணங்களையும் இந்திய எல்லைக்கோடு வரை நகர்த்தியுள்ளது என்று இந்திய இரகசிய சேவைப் பிரிவினர் கூறியதாக பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

(உ-எ. வு)

## மரம்...

ஹபராதுவை, கொக்கல பகுதியில் நேற்று முன்தினம் அதிகாலை இச்சம்பவம் நடந்தது.

பிரேமசிறி வயது 37 (தந்தை), பிரியந்த குமார வயது 6 (மகன்), ஜயந்தகுமார வயது 3 (மகன்), ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

வீட்டில் தாய் தனது சிறிய பிள்ளையை தூக்கிக் கொண்டு சமையலறை நோக்கி சென்றுள்ளார். இதனால் அவர் உயிர் தப்பினார்.

அன்றைய தினம் இப்பகுதியில் வீசிய சூறாவளி காற்றினாலேயே அந்த மரம் முறிந்து வீழ்ந்ததாக கூறப்படுகிறது.

(உ-வ).

---

1,50,000 ரூபா நிதியை அன்பளிப்பு செய்துள்ளது.

கவுன்சிலில் நடைபெற்ற ஒரு வைபவத்தில் லிபிய இஸ்லாமிய அழைப்பு நிறுவனப் பிரதிநிதி ஜனாப் முப்தா அகாட் கவுன்சில் தலைவர் ஜனாப் ஏ ஆர் நஜிமுத்தீனிடம் இத் தொகைக்கான காசோலையைக் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.

(ஐ-007)

# ராகிங் என்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இளம் பட்டதாரி மாணவிகள் மானபங்கப்படுத்தப்பட்டு உள்ளனர், துன்புறுத்தப்பட்டுள்ளனர்

பெற்றோர்கள் பொலீஸ் மா அதிபரிடம் நேரடியாக முறைப்பாடு செய்துள்ளனர். தமது பிள்ளைகளைப் பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பவே பெற்றோர் அஞ்சுகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார்.

பல்கலைக்கழகங்களில் ராகிங் நடைபெறுவது சாதாரணம் தானே என ஒரு பெண் நிருபர் குறிப்பிட்டார்.

அப்படியானால் இளம் மாணவிகளின் உள்ளாடைகளைக் களைவதும் சர்வ சாதாரணம் என்று கூறுகின்றீர்களா என்று அமைச்சர் திருப்பிக் கேட்டார்.

[உ-ய]

## லீக் கூட்டம் 20இல்

அக்கரைப்பற்று, மே 16

அம்பாறை உதைபந்தாட்ட லீக் சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம் மாதம் 20ஆம் திகதி காலை 9-00 மணிக்கு கல்முனை பொது நூல் நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளையும் விளையாட்டு அதிகாரி ஜனாப் எம் ஏ அப்துல் ஜப்பார் மேற்கொண்டு வருகிறார்.

திகாமடுல்ல மாவட்ட எம் பி திரு சந்திரதாஸ களப்பத்தி பிரதம விருந்தினராக் கலந்து கொள்கின்றார்.

அம்பாறை மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் திரு ரெங்கிபால க சில்வாவும் கலந்து கொள்கிறார்.

[ந-035]

## சனத்தையில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொரளை ஏ எப் றேமன்ஸ் பிரேத மண்டபத்திலிருந்து பிற்பகல் 1-30 மணியளவில் திருமதி கலாவின் பூதவுடல் ஊர்வலமாக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அங்கு மகன் அருண் சகோதரன் விக்னேஸ்வரன் ஆகியோர் ஈமக் கிரியைகளை நிறைவேற்றினர்.

[உ-ங-கூ]

## காவடிதூக்கியவர்கள் இன்று அகற்றி விட்டதாக தம்பட்டம்

### இல்யாஸ் கூறுகிறார்

புத்தளம், மே 16

"இஸ்ரவேலரை இங்கிருந்து வெளியேற்றி விட்டோம் என்று தம்பட்டம் அடிப்பவர்கள் ஒரு காலத்தில் இஸ்ரவேலுக்கு காவடி தூக்கியவர்களே!"

வட மேல் மாகாண சபையின் புத்தளம் பிரதிநிதி டாக்டர் ஐ எம் இல்யாஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

வடமேல் மாகாண சபையின் மாதாந்த அமர்வு குருநாகல் நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது.

அவைத் தலைவர் திரு பெர்னாண்டோ புள்ளே தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் பேசும் போதே ஜனாப் இல்யாஸ் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தனது உரையில் மேலும் கூறியதாவது:

"1985 ஆம் ஆண்டு இங்கு வந்த இஸ்ரவேலரையும் 1987 ஆம் ஆண்டு இங்கு வந்த இந்திய அமைதிப் படையினரையும் வெளியேற்றியது குறித்த ஜனாதிபதிக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தனது நன்றியை தெரிவித்துக் கொள்கின்றது.

இந்த நாட்டு முஸ்லிம் மக்களின் ஏகோபித்த எதிர்ப்பினால் தான் இஸ்ரவேல் வெளியேற்றப்பட்டது.

இந்த உண்மையற்ற கூற்றையும் இச்சபை உணர்ந்து கொள்ள வேண்டும்"

இவ்வாறு அவர் கூறினார்.

(ஐ-241)

# இன ஐக்கியத்தின் மூலமே அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்

## வரவேற்பில் ராஜாங்க அமைச்சர் பாருக்

மீரிகம, மே 16

இந்நாட்டில் சிறுபான்மையினரான முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்கள மக்களுடனும் ஏனைய சமூகங்களுடனும் இணைந்து வாழ வேண்டும். இன ஐக்கியத்தின் மூலம்தான் நாட்டில் அபிவிருத்தியை ஏற்படுத்தலாம்.

போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் யூ எல் எம் பாருக் மேற்கண்டவாறு கூறினார்.

திஹாரிய இஸ்லாமிய அநுகவினர் நிலையத்தில் அண்மையில் அமைச்சருக்கு வரவேற்பளிக்கப்பட்டது. அல்ஹாஜ் எம் ஈ எம் ஸாபிர் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் அல்ஹாஜ் ஜிப்ரி ஹனீபாவின் வரவேற்புரையைத் தொடர்ந்து அமைச்சர் மேலும் அங்கு பேசுகையில் —

பெரும்பான்மை சிங்களவர்களின் ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டு வந்துள்ள எனக்குப் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் பதவியை ஜனாதிபதி வழங்கியிருக்கிறார். என் மீதும் முஸ்லிம் சமூகத்தின் மீதும் ஜனாதிபதி வைத்துள்ள நம்பிக்கையை இது காட்டுகிறது. முஸ்லிம்கள் பெரும்பான்மை சிங்களவர்களுடன் ஐக்கியமாக வாழப் பழகிக் கொள்ள வேண்டும், இன ஐக்கியத்தைக் குலைக்கும் செயல்களில் இருந்து தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

ஜனாப் இஸட் ஏ எம் நாசிம் நன்றியுரை வழங்கினார்.

[ல-403]

---

கொழும்பு, மே 16

ஸ்ரீலங்கா தேசிய கலைஞர் பேரவை என்ற புதிய அமைப்பின் அறிமுக விழா எதிர்வரும் 20ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) மாலை 6 மணிக்கு மருதானை சரசவி பாய தெச்சிகை மண்டபத்தில் நடைபெறும்.

தேசிய மக்கள் பேரவையின் அனுசரணையுடன் இந்த புதிய அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது.

கொழும்பு கப்பித்தாவத்தை ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலய பிரதம குருக்களும் ஸ்ரீ ராம சானசபையின் போஷகருமான பிரம்மஸ்ரீ பா சண்முகரத்ன சர்மாவின் தலைமையில் இவ் விழா நடைபெறும்.

தேசிய வீடமைப்பு நிர்மாணக் கூட்டுத்தாபன நிறைவேற்றுப் பணிப்பாளர் திரு டி எம் சுமதிதாச, தேசிய நீர் வழங்கல் நீர் வடிகால் சபையின் பிரதித் தலைவர் திரு ரத்னசிறி ராஜபக்ஷ, ஐ தே க வாழைத்தோட்ட அமைப்பாளர் திரு யூ எல் சேனரத்ன அபேகோன் விழாவில் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொள்வர்.

தேசிய மக்கள் பேரவையின் பொதுச் செயலாளர் ஜனாப் ஜே ஜே நஜிமுதீனின் விளக்கவுரையுடன் விழா ஆரம்பமாகும்.

[ஒ-ர]

## வெளிநாடு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படாது என கூறிய அமைச்சர் இது தொடர்பாக சுகாதார அமைச்சு உள்நாட்டு வைத்திய நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி இருக்கும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அமெரிக்கா, பிரிட்டன், அவுஸ்திரேலியா சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இருந்தே வைத்திய நிபுணர்கள் அமைக்கப்படவுள்ளனர் என்று அமைச்சர் விஜேரத்ன மேலும் தெரிவித்தார்.

(உ-ய).

தென் ஆபிரிக்கா

# அரச ஆஸ்பத்திரிகளில் இன வாதம் ஒழிப்பு

## உடனடியாக செய்யும்படி அரசாங்கம் உத்தரவு

கேப்டவுன், மே 17

தென் ஆபிரிக்காவில் அரச ஆஸ்பத்திரிகளில் இன வாதம் முற்றாக ஒழிக்கப்படும். ஆஸ்பத்திரிகளில் இனவாதத்தை உடனடியாக ஒழிக்கும்படி அரசாங்கம் நேற்று உத்தரவு பிறப்பித்தது.

